සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**33 T I**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் .........................................** **வரலாறு I** **நேரம் : 1 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

(01) உள்நாட்டு இலக்கிய நூல் தொடர்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களில் உம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கூற்று.
1. மகாவம்சம் மகாசேனனின் ஆட்சிக்காலம் முடியும் வரையான தகவல்களைத் தருகிறது.
2. அனுராதபுரம் காலந்தொட்டு கோட்டை காலம் ஆரம்பம் வரை எழுதப்பட்டவை சமய விடயங்களைக் கொண்டதாகும்.
3. சிங்கள எழுத்தின் வளர்ச்சியைப் பற்றி அறியலாம்.
4. மகாவம்சத்திற்கு முன் தீபவம்சம் எழுதப்பட்டதனால், எண்ணிறைந்த பழமைவாய்ந்த தகவல்கள் பெற்றுக் கொள்ள உதவியாக இருந்தது.

(02) கம்பளை இராச்சியம் தொடக்கம் கோட்டை இராச்சியம் வரை உள்ள வரலாற்றைக் கற்க மிகப்பொருத்தமான நூல்,
1. ராஜவலிய 2. தீபவம்சம் 3. சீதாவக்க சடன 4. போதிவம்சம்

(03) கல்வெட்டுக்கள் தொடர்பாக மிகவும் பொருத்தமான கூற்று.
1. அநேகமான கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ள தகவல்கள் அவை நடந்து முடிந்து நீண்ட காலத்திற்குப் பின்னர் உள்ளவையாகும்.
2. தொடர்ச்சியான வரலாறு ஒன்றை கட்டி எழுப்புவதற்கு கல்வெட்டுக்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.
3. வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டவைகளை உறுதிப்படுத்திக் கொள்ள கல்வெட்டுகள் உதவுகின்றன.
4. இலங்கையில் கல்வெட்டுக்கள் பொலநறுவை காலத்தோடு முடிவுற்றன என அறியமுடிகின்றது.

(04) கீழே கொடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களில் இலங்கைக்கு வருகை தராது, இலங்கை பற்றி தகவல் எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரம் எது?
1. இபுனு பதூதாவின் தேச சஞ்சார அறிக்கை 2. றொபர்ட் நொக்ஸின் அன்றைய இலங்கை
3. பாகியன் தேரரின் அறிக்கை 4. மெகஸ்தசின் இன்டிக்கா

(05) கீழே கொடுக்கப்படும் இலக்கிய மூலாதாரங்களின் கிரேக்க இலக்கிய மூலாதாரங்களை மாத்திரம் கொண்ட விடை?
A. டிமுண்டோ B. ஹியூவ்சாங் அறிக்கை C. பூகோள சாத்திரம்
D. இண்டிக்கா E. ரிபெய்ரோவின் இலங்கை வரலாறு F. ஒனெசி சிரிசெட்டின் அறிக்கை
1. ABD 2. BEF 3. ADF 4. ADE

(06) படத்தில் காட்டப்பட்டிருப்பது பண்டைய இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயமாகும். இது எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.?
1. தம்பஸ்ஸ 2. மத்திய கால தங்க நாணயம்
3. யானை மற்றும் சுவஸ்டிகா நாணயம் 4. இலட்சுமியின் நாணயம்



(07) றொபர்ட் நொக்ஸ் உள்ளிட்ட பிரித்தானிய கப்பல்படையினர் இந்நாட்டிற்கு வரும்போது ஆட்சியில இருந்த அரசன்?
1. இரண்டாம் இராஜசிங்கன் 2. முதலாம் இராஜசிங்கன்
3. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4. இராஜாதி இராஜசிங்கன்

(08) வரலாற்றைக் கற்க பயன்படுத்தப்படும் நாணய மூலாதாரம் மூலம் பெற்றுக்கொள்ள முடியாத தகவல்
1. பண்டையகால வியாபாரம் தொடர்பான தகவல்கள்
2. பண்டைய காலத்தில் சேகரிக்கப்பட்ட பல்வேறு வரி தொடர்பாக தகவல்கள்
3. பண்டையகால உலோக பாவனை பற்றிய தகவல்கள்
4. நாட்டின் அன்றைய பொருளாதாரத்தை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.



kalvi.lk

(09) இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்களுள் ஒன்று.
1. நூலாசிரியர்
2. நூலாசிரியரின் வாழ்க்கை வரலாறு
3. நூலின் அளவு
4. நூலில் உள்ள தகவலின் தன்மை

(10) கி.பி. 12ம் நூற்றாண்டின் கால வரலாற்றை அறிவதற்கு உதவும் மூலாதாரம்?
1. வல்லிபுர பொற்சாசனம்
3. பனாகடுவ செம்பு சாசனம்
2. களுதிய பொகுன கல்வெட்டு
4. சிகிரிய கவிதைகள்

(11) தொல்பொருள்களின் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய மிக முக்கியமான தகவல்?
1. இந்நாட்டின் புராதன அரசியல் அமைப்பு
2. புராதன மக்களின் பன்முகமான திறமைகள், ஆற்றல்கள்
3. பண்டைய மக்களின் வாழ்க்கை முறை
4. முன் வரலாற்றுக்கால மனிதனின் வாழ்க்கை முறை

(12) முற்காலப் பெண்களின் ஆடை அணிகள், அலங்காரம் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு உதவியாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
1.முற்காலப் பெண்கள் முக அலங்காரத்திற்கு நிறக்கற்களை பயன்படுத்தினர்.
2. கண்டி தலதா மாளிகையில் வரைந்துள்ள ஓவியங்கள்
3. புதைபொருள் ஆய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட ஆபரணங்கள்
4. சிகிரியா சுவர்களில் வரையப்பட்டுள்ள பெண்களின் உருவம்கொண்ட சித்திரங்கள்.

(13) தொல்பொருள் மூலாதாரங்கள் அழிவடைந்து போவதற்கான பிரதான காரணமாக அமைவது?
1. நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகள்
2. வரலாற்றுச் சின்னங்களை பார்வையிடுவோரால் மேற்கொள்ளப்படும் அழிவு நடவடிக்கைகள்
3. பொருளாதார ரீதியில் பெறுமதியான பொருட்கள் புதைத்திருக்கலாம் என்ற தவறான கருத்தினால் இவ்வாறான இடங்களை அகழ்தல்.
4. தொல் பொருட்கள் காணப்படும் இடங்கள் இன்றும் நாட்டிற்குள் காணப்படுகின்றமை.

(14) இலங்கையில் முதலில் குடியேறிய மனித இனம்.
1. ஹோமோசேபியன் 2. ஹோமோஇரக்டஸ் 3. ஹோமோஹெபிலஸ் 4. ஹோமோநியாண்டதல்

(15) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கு பொருந்தமற்ற நிகழ்வு.
1. கேத்திரகணித முறையிலான கல்லாயுதங்கள் பயன்படுத்தப்பட்டன
2. தாவர உணவுகளையும், விலங்குகளையும் சுட்டு சாப்பிட்டமை.
3. நாடோடிகளாக வாழ்க்கை நடத்தியதோடு கற்குகைகளில் வசித்தனர்.
4. மண்பாத்திரங்களை பயன்படுத்தியமை.

(16) கீழே தரப்பட்டுள்ள இடங்களுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தாழ்நிலை உலர்வலய வெட்டவெளிப் பாசறைகளாக விளங்கிய இடம்?
1. பண்டாரவளை
2. பெல்லஸ்பெதி பெலெஸ்ஸ
3. மினிஹாகல்கந்த
4. பொத்தான

(17) முன் வரலாற்றுக் காலத்தில் இலங்கையில் மனித நடவடிக்கைகளில் ஏற்பட்ட அடிப்படை மாற்றம் யாது?
1. மிருகங்களை வேட்டையாடுதல்
2. உணவில் உப்பு சேர்த்து சாப்பிட்டமை
3. இரும்பு உலோகப் பாவனை
4. மரணித்தவனின் சடலத்தை பாதுகாப்பாக புதைத்தமை

(18) கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் அரேபியாவைச் சேர்ந்த வரலாற்று அசிரியர் அல் பலசூரியின் கருத்துப்படி, அக் கால சிவப்புத் தீவின் மன்னர் இஸ்லாமிய அரசர்களுடன் பரிசுகளைப் பரிமாறிக்கொண்டிருந்தனர். இங்கு சிவப்புத் தீவு என குறிக்கப்படும் நாடு எது?
1. சவூதி அரேபியா 2. ஈராக் 3. இலங்கை 4. இந்தியா

(19) கீழே தரப்பட்டுள்ள இடங்களில் வீடமைப்பு தொழில் நுட்பம் சம்பந்தமான புராதன தகவல்கள் கிடைத்த இடம் எதுவென குறிப்பிடுக.
1. கல்சொஹன் மயானம்
2. இப்பன்கடுவ
3. பதிராஜவல
4. உடரஞ்சா மடம்



kalvi.lk

(20) கீழே A நிரலில் கைத்தொழிலில் ஈடுபடுவோரையும் B நிரலில் அதற்கு உரித்தான கைத்தொழில்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை தொடர்பு படுத்தினால் வரும் சரியான விடை எது?

| | **A** | | **B** |
|---|---|---|---|
| 1. | கபர | - | மண்பாண்ட கைத்தொழில் |
| 2. | தம்பகார | - | இரும்புக் கைத்தொழில் |
| 3. | கும்பகார | - | தந்த செதுக்கல் கைத்தொழில் |
| 4. | தடிக | - | செம்புக் கைத்தொழில் |

(21) கீழே தரப்பட்டுள்ள அம்சங்கள் எக்கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன என்பதை ஒழுங்கு முறைப்படி குறிக்கும் விடையை தெரிவுசெய்க.

- துறைமுகங்களில் வரி அறவிட்டமை
- உரிய காலத்தில் அறுவடை செய்யத்தவறும் நபர்களுக்கு 5 கலங் அபராதம் விதிப்படல்.
- சட்டரீதியாக அனுமதிக்கப்படாத தராசு படிகளை அனுமதித்தல்.

1. கொடவாய கல்வெட்டு. கொண்டவட்டான் தூண் கல்வெட்டு, சொரபொரவெவ தூண் கல்வெட்டு
2. சொரபொரவெவ தூண் கல்வெட்டு, களுதிய பொகுண கல்வெட்டு, மிஹிந்தலை சுவர் கல்வெட்டு
3. பதுளை தூண் கல்வெட்டு, கொடவாய கல்வெட்டு, கல்பொத்த கல்புத்தகம்.
4. களுதிய பொகுண கல்வெட்டு, கொடவாய கல்வெட்டு, மிஹிந்தலை சுவர் கல்வெட்டு

(22) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் மரணச்சடங்கு முறை அல்லாதது?
1. குடும்ப அங்கத்தவர் இறந்தால் அவர் வாழ்ந்த குகையிலேயே அடக்கம் செய்யப்பட்டமை.
2. களிமண் ஓடக் கல்லறையில் அஸ்தி பாதுகாத்து வைக்கப்பட்டமை.
3. புதைத்த சடலம் உக்கிப்போனதும் திரும்ப தோண்டி எடுக்கப்பட்டமை.
4. எலும்புக்கூடு வளைத்து புதைக்கப்பட்டமை.

(23) வரலாற்றுக்கு முற்பட்ட காலமனிதன் உணவுடன் உப்பு சேர்த்து சாப்பிட்டதற்கான ஆதாரம் கிடைத்த இடம்
1. பட்டதொம்பலென  2. கிதுள்கெலபெலிலென
3. இராவணஎல்ல கற்குகை  4. பாகியன் கலவெல

(24) முன் வரலாற்றுக்கால மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் மட்டும் கொண்ட விடை?
1. உடரஞ்சா மடம், பெரகல, புந்தல  2. ரஞ்சா மடம், கல்சொஹன் கனத்த, ஹல்துமுல்ல
3. அலுகல்கே, புந்தல, பெரகல  4. உடமல்ல, இப்பன்கடுவ, யடிகல்பொத்த

(25) இற்றைக்கு 3129 வருடங்களுக்கு முன்னர், நிர்மாணிக்கப்பட்ட உடரஞ்சாமடம குடியிருப்பொன்றில் இருந்து கிடைத்த தகவல்.
1. முன் வரலாற்றுக்காலத்தில் கல்லாயுதங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.
2. நிறம் தீட்டுதல் சம்பந்தமான அறிவை முன் வரலாற்றுக்கால மக்கள் பெற்றிருத்தல்.
3. விவசாய வாழ்க்கையை மேற்கொண்ட போதும், விலங்குகளை வேட்டையாடுவதை முற்றாக நிறுத்தி விடவில்லை.
4. முன் வரலாற்றுக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் தம்மை அலங்கரித்துக் கொள்வதில் அதிக அக்கறை காட்டியுள்ளனர்.

(26) வரலாற்றுக்கால குடிப்பரம்பல் பற்றிய தகவல்களை சரியாகக்காட்டும் சுட்டியாக அமைவது எது?
1. நிரந்தரமாக அமைக்கப்பட்டிருந்த குடியிருப்புக்கள்
2. இறந்தவர்களை புதைப்பதற்காக அமைக்கப்பட்ட மயானங்கள்
3. தாழ்நில ஈரவலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற்குகைகள்
4. சிறியளவிலான கிராமக் குளங்கள்

(27) இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஆற்றுக்கு குறுக்கே அணையை அமைத்த ஆட்சியாளன்
1. வசப மன்னன்  2. 1ம் அகபோ மன்னன்  3. தாதுசேன மன்னன்  4. இளநாக மன்னன்

(28) உலர்வலய பிரதேசங்களில் குளம், குளத்தொகுதிகளாக அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம்
1. வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்  2. விவசாயத்தேவைக்கு நீரை வழங்குதல்
3. நீரைச் சேமித்து வைத்தல்  4. மண்ணரிப்பைத் தடுத்தல்

(29) இந்நாட்டு மக்கள் கிராமங்களில் வாழ்வதற்கு ஆரம்பித்தது
1. முன் வரலாற்றுக் காலம்  2. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3. தொழில்நுட்ப காலம்  4. வரலாற்றுக்காலம்



kalvi.lk

(30) முன்வரலாற்றுக் காலத்தில் குடியேற்றங்களின் தன்மைகள் பற்றிய தரவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றை தொடர்புபடுத்தினால், வரும் விடையைத் தெரிக.

- இடையர் வாழ்ந்த கிராமம் — A மணிகாரகம
- துறைமுகத்தை அண்டிய கிராமம் — B பட்டான காம
- விவசாயிகள் வாழும் கிராமம் — C கோபால காம
- இரத்தினம் அகழ்வோர் வாழ்ந்த கிராமம் — D கசீசாரகாம

1. C,D,A,B 2. D,B,C,A 3. C,B,D,A 4. C,A,D,B

(31) புராதன நீர்ப்பாசனம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற பொருள்சான்றுகளில் குறிக்கப்பட்டுள்ள மிருகம் எது?
1. அன்னம் 2. நாகம் 3. மாடு 4. யானை

(32) இலங்கையின் பண்டைய சமூக அமைப்பில் தனவந்தர்களும், அவர்களது நிர்வாக அலகுகளும் தரப்பட்டுள்ளன. இதனைத் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடையை தெர்வுசெய்க.

- இல்லத்தலைவர்கள் — A மபுறுமுகா
- புராதன கிராமத் தலைவன் — B குர்ஹபதி
- பிரதேச தலைவர்கள் — C கமிக
- நாட்டை நிர்வகித்த தலைவன் — D பருமக

1. D,A,B,C 2. C,A,D,B 3. D,B,C,A 4. B,A,D,C

(33) இலங்கையின் வரலாற்று யுகத்தில் நதிக்கரைகளுக்கு அப்பால், உள்ள பிரதேசங்களிலேயே குடியிருப்புக்கள் பரவலடைந்தமைக்கு சான்றாக அமைவது?
1. மல்வத்துஓய பிரதேசமாகும் 2. கிரிந்தி ஓய பிரதேசமாகும்
3. தெதுரு ஓய பிரதேசமாகும் 4. மாணிக்க கங்கை பிரதேசமாகும்.

(34) ஏதும் பிரச்சினைகள் நேர்ந்தால், பத்து கிராம பிரதானிகளும் சேர்ந்து அப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு எது?
1. மிஹிந்தலை 2. யாப்பாஹுவ 3. பொலநறுவை 4. களுதியபொகுண

(35) அரசுக்கு முற்பட்ட காலத்தில் பிரபுக்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை நிரூபிக்கும் முக்கியமான சான்று?
1. உடரஞ்சா மடத்தில் கிடைத்த கண்ணுக்கு மை பூசும் குச்சி
2. இப்பன்கடுவ கல்லறையொன்றில் கண்டெடுக்கப்பட்ட மாலை
3. தெடிகம கொடவிஹாரையில் கண்டெடுக்கப்பட்ட யானை விளக்கு
4. வெளிநாட்டு நாணயங்கள் எமது நாட்டு கரையோர பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்டமை.

(36) தம்புள்ள விஹாரை கல்வெட்டில் தன்னை “நரேஸ்வர” எனும் பெயரால் குறிப்பிட்டுள்ள மன்னன் யார்?
1. குட்டகண்ண அபய மன்னன் 2. மகாசேனன்
3. காசியப்பன் 4. நிஸ்ஸங்க மன்னன்

(37) தாதுசேன மன்னனுக்கு பிறகு காசியப்ப மன்னனுக்கு அரசுரிமை கிடைத்தது.
1. தந்தையிடமிருந்து மகனுக்கு 2. மூத்த சகோதரியிடமிருந்து இளைய சகோதரனுக்கு
3. அரசனின் மனைவியின் சகோதரனுக்கு 4. மேற்கூறப்பட்ட எதுவும் அல்ல.

(38) ” நகர குத்திக” என்ற அதிகாரியின் பொறுப்பு,
1. நகர கட்டட நிர்மானியாக செயற்படுதல் 2. அரச செயலக தலைவராக செயற்படுதல்
3. யானைப்பிரிவின் தலைவராக செயற்படுதல் 4. நகர பரிபாலகராக செயற்படுதல்

(39) கீழே தரப்பட்டுள்ள குளங்களுள் அனுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட பெரிய குளங்களை மட்டும் கொண்ட விடை யாது?
1. பசவக்குளம், கலாவாவி, திஸா வாவி
2. பராக்கிரம சமுத்திரம், நாச்சதுவ குளம், யோத வாவி
3. மின்னேரியாக் குளம், மகா கனதார வாவி, கிரிதலை குளம்
4. இராஜாங்கனை வாவி, தப்போவ வாவி, கவுடுல்ல வாவி

(40) கீழ்வரும் மன்னர்களில் பொலநறுவை இராஜதானியைச்சேர்ந்த அரசர்களை மட்டும் காட்டும் விடையாது?

A - 1ம் பராக்கிரமபாகு B - துட்டகைமுனு மன்னன்
C - தேவநம்பிய திஸ்ஸ மன்னன் D - 1ம் விஜயபாகு மன்னன்
E - வலகம்பாகு மன்னன் F - நிஸ்ஸங்கமல்ல மன்னன்

1. A,C,F 2. A,C,D 3. B,C,F 4. B,D,E



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**33 T II**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ......................................... வரலாறு II நேரம் : 3 மணித்தியாலம்**

- **பகுதி i ல் இருந்து முதலாம் வினா கட்டாயம். பகுதி ii ல் இருந்து 5 வினாக்களுக்கு விடை தருக. எல்லாமாக 6 வினாக்களுக்கு விடையளிக்குக.**

## பகுதி I

(01) (அ) i ல் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்று இடங்கள், கொடுக்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், ii ல் கொடுக்கப்பட்டுள்ள இடங்களை, கொடுக்கப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்து பெயரிடுக.

(i) பெம்பரிப்பு, தேவநகர், மாகாமம், கோகண்ணதித்த, புலஸ்திபுர, படதொம்பலன, சீகிரியா, அலுலேன, புத்தள, நாச்சுவ தீவு குளம், மாந்தோட்டம், கிரிந்தி ஓயா

(ii) கொன்ஸ்தாந்து நோபில், கிருஷ்ணா நதி, செங்கடல், ரோம், போர்த்துக்கல், கிறேக்கம்.

(ஆ) (i) A, B, C, D யினால் காட்டப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளுக்கு பொருத்தமான விடையை A, B, C, D என்ற ஒழுங்கில் எழுதவும்.

A இலங்கைக்கு வருகைதந்த இலங்கையைப் பற்றி எழுதிய ஒல்லாந்த இலக்கிய நூலாசிரியர் யார்?

B இலங்கையின் மிகப்பெரிய கல்வெட்டு என கருதப்படும் கலபொத்த கல்வெட்டை எழுதிய மன்னன்.

C மத்திய கற்காலத்தில் வாழ்ந்த மனிதன் கேத்திர கணித உருவில் கல்லாயுதங்களை உருவாக்க பயன்படுத்திய மூலப்பொருள் யாது?


D மகாவம்சம் எழுதி 4 நூற்றாண்டுக்குப் பின்னர், மேலும் விளக்கம் அளிப்பதற்காக எழுதப்பட்ட தீகாவ எனும் உரைநூல் எவ்வாறு பெயரிடப்பட்டது?

- A, B இனால் கொடுக்கப்பட்டுள்ள கலையம்சம் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.

(ii) A 1. A எழுத்தால் காட்டப்பட்டுள்ள கலையம்சம் யாது?
2. இது கண்டுபிடிக்கப்பட்ட இடம் யாது?
3. இது எக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன?
4. அக்காலத்தில் இவை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணம் எது?

A


(iii) B 1. B யினால் காட்டப்பட்டுள்ள கலை அம்சத்தின் பெயர் என்ன?.
2. அதை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட இலை யாது?
3. அதில் எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்ட கருவி எது?
4. இங்கு எழுதப்பட்ட எழுத்துக்கள் காட்டப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட செயற்பாட்டை எவ்வாறு குறிப்பிடுவது?

B


## பகுதி II

(02) (i) இலங்கை வரலாற்றை கற்றுக் கொள்ள பயன்படுத்தப்படும் இலக்கிய மூலாதாரங்கள் 3 னைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) இலங்கையின் வரலாற்று மூலாதாரங்களாகிய தீபவம்சத்தில் எக்கால பகுதிக்குரிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன என்பதனை குறிப்பிட்டு தீபவம்சத்தில் காணப்பட்ட குறைப்பாடுகள் இரண்டையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) நாட்டின் வரலாற்றை கட்டியெழுப்ப இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனிக்கப்பட வேண்டிய அம்சங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) வரலாற்றை கற்கும் போது இலக்கிய மூலாதாரத்தை விட தொல்பொருள் மூலாதாரத்தில் மிக நம்பக தன்மை கொண்ட தகவல்களை அடையாளம் காணலாம். மேலே உள்ள கூற்றை விபரிக்க. (6 புள்ளிகள்)



kalvi.lk

(03) (i) A, B, C யினால் கொடுக்கப்பட்டுள்ள மூலாதாரங்கள் தொடர்பாக ஒவ்வொரு உதாரணம் தருக.
A - தூது காவியம்    B - அறபு இலக்கியம்    C - கல்வெட்டு

(ii) அனுராதபுர காலத்தில் இலங்கையில் பயன்படுத்திய பழைய நாணயங்கள் 4 இனை குறிப்பிடுக.

(iii) வரலாற்றைக் கற்பதற்கு மஹாவம்சத்தின் முக்கியத்துவத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.

(iv) வரலாற்றைக் கற்பதனால் எமக்கு கிடைக்கும் பிரயோஜனங்கள் மூன்றைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(04) (i) இலங்கை தொடர்பாக தகவல் உள்ளடக்கி இருந்த தென் இந்திய மூலாதாரங்கள் மூன்று எழுதுக

(ii) கீழே A, B, C, D யினால் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான நபர்கள் யார் எனக் குறிப்பிடுக.

A - இந்நாட்டின் பழைமைவாய்ந்த கல்வெட்டாக குறிப்பிடப்படும் கல்வெட்டு எது?

B - கி.பி. 1640 மார்ச் மாதத்தில் இந்நாட்டிற்கு வருகைதந்து, 18 வருடங்களாக இந்நாட்டில் வாழ்ந்து, இலங்கைபற்றி தகவல்கள் உள்ளடக்கிய இலக்கிய வேதாந்தத்தை எழுதிய போர்த்துக்கேயர் யார்?

C - பாதிகாபாய மன்னனின் ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரை அனுப்பிய நாடு எது?

D - இலங்கை தொடர்பாக தகவல்களை உள்ளடக்கிய பழைமைவாய்ந்த வெளிநாட்டு நூலாகக் கருதப்படும் ''டிமுண்டோ'' வை எழுதிய நபர் யார்?

(iii) பண்டைய நாணயங்களை ஆய்வுசெய்வதன் மூலம், இலங்கையின் வரலாறு தொடர்பாக வெளிப்படுத்தக் கூடிய தகவல்கள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

(iv) (a) எழுத்தாவணம் என்பது யாது?

(b) வரலாறு கற்க கல்வெட்டுக்கள் எந்தளவு தூரத்திற்கு பயன் உடையது என்பதை 2 காரணங்கள் ஊடாக விளக்குக.

(05) (i) இலங்கையின் தென்மாகாணத்திற்கு சொந்தமான கரையோர உலர்வலயத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கல்லாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் 3 தருக.

(ii) கற்கால மனிதன் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் 4 தருக.

(iii) வரலாற்றுக்கு முற்பட்டகால (கற்கால) மனிதனின் உணவுப் பழக்கவழக்கங்களை 2 காரணங்களைக் கொண்டு விளக்குக.

(iv) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் மரணச்சடங்குகளின்போது, கையாளப்பட்ட சம்பிரதாய முறைகள் 3 ஐ குறிப்பிட்டு விளக்குக.

(06) (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும். முன் வரலாற்றுக் காலத்திற்கும் இடையே காணக்கூடிய வேறுபாடுகள் 3 தருக.

(ii) கீழே A, B, C, D என கொடுக்கப்பட்டுள்ள முன்வரலாற்றுக்கால தகவல்களுக்கு பொருத்தமான விடையை தெரிவுசெய்க.

A - சப்ரகமுவ மாகாணத்தில் 3500 வருடங்களுக்கு முன், மனிதனால் பயன்படுத்தப்பட்ட மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

B - பாரிய கற்பாறைகளை ஒன்றுசேர்த்து சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ள மயானம் எவ்வாறு அழைப்பட்டது?

C - மெகாதிலிக் முறையிலான மயானங்களில் களிமண் பாத்திரங்களில் பாதுகாக்கப்பட்ட அஸ்தி குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருந்ததனை எப்பெயரால் குறிப்பிடுகின்றனர்?

D - வேட்டையாடும் முறையிலிருந்து விடுபட்டு நிலையான வீடுகளை அமைப்பதைக் குறிக்கும் சொல் எது?

(iii) முன்வரலாற்றுக்கால பெண்கள் தம்மை அலங்கரித்துக்கொள்வதற்காக, அக்கறை காட்டியதற்கு இரு ஆதாரங்களை குறிப்பிட்டு விளக்குக.

(iv) முன்வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் தொழில்நுட்பம் பயன்படுத்திய முறையை மூன்று காரணங்களின் ஊடாக விளக்குக.

(07) (i) முன்வரலாற்று காலத்திற்குஉரிய கிராமங்கள் கீழே A,B,C எழுத்தினால் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு வழங்கப்பட்ட பெயர்களை குறிப்பிடுக.

A - மட்பாண்டம் தயாரிப்பவர்கள் வாழ்ந்த கிராமம்.

B - மீனவர்கள் வாழ்ந்த கிராமம்.

C - மக்களால் கைவிடப்பட்ட கிராமம்.

(ii) வரலாற்றுக்கால குடிப்பரம்பலில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் 4 தருக.



kalvi.lk

(iii) (a) வரலாற்றுக் காலத்திற்குரிய குடியிருப்புக்கள் வளர்ச்சியடைந்த விதம் பற்றி அறிந்து கொள்ள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நதி எது?

(b) வரலாற்றுக்காலத்திற்குரிய மக்களின் சீவனோபாயமாக விளங்கிய விவசாயம், மேற்கொள்ளப்பட்ட முறையை சுருக்கமாக விளக்குக.

(iv) வரலாற்றுக்கால மக்களிடையே கிராம நிர்வாகம் தொடர்பான தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் முறையை, 2 அம்சங்களின் மூலம் விளக்குக.

08) (i) A, B, C யினால் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுக்கு அமைய உரிய மன்னர்களை முறையே குறிப்பிடுக.

A - இந்நாட்டின் முதன்முறையாக திட்டமிடப்பட்ட போர் ஒன்றுக்கு தலைமை தாங்கிய மன்னன்.

B - புத்த பெருமானார் இலங்கைக்கு வரும்போது ஆட்சியில் இருந்த மன்னன்

C - பிரதேச ஆட்சியாளர்கள் பலருடன் போர் செய்து இலங்கையில் முதல் அரசனாக பதவியேற்றவன். (3 புள்ளிகள்)

(ii) மன்னனுக்கு என அமையப் பெற்ற இலட்சணங்கள் 4 உம் எவை? (4 புள்ளிகள்)

(iii) அரச அதிகாரத்தை பண்முகப்படுத்துவது தொடர்பாக அரசனால் மேற்கொள்ள கூடிய இரு கடமைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) (a) வசப மன்னனின் அரச வம்சத்தை குறிப்பிடுக.

(b) நிர்வாகத்தை ஒழுங்கமைத்தல், பொருளாதாரத்தை கட்டி எழுப்புதல் என்பன தொடர்பாக வசப மன்னன் மேற்கொண்ட சேவையை உதாரணம் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

09) (i) இலங்கையில் ஒன்றுபடுத்தப்பட்ட நிர்வாகத்தில் அரச நிர்வாக கட்டமைப்பின் போது வழங்கப்பட்ட பெயர்களை குறிப்பிடுக.

A. வழக்கங்கள், மரபுமுறை தொடர்பான அதிகாரி

B. வர்த்தகம் தொடர்பான தலைவர்

C. யானை பிரிவின் தலைவர்

(ii) கீழே கொடுக்கப்பட்ட தகவல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள பண்டைய பெயர்களை குறிப்பிடுக.

A. இந்நாட்டின் சிறிய பிரதேசங்களை ஆட்சி செய்த பிரபுக்களை புரான கல்வெட்டில் எவ்வாறு குறிப்பிட்டனர்?

B. மன்னர்கள் முடிசூட்டு விழாவின் போது பயன்படுத்திய பொருட்களுக்கு வழங்கும் பெயர்.

C. வசப மன்னன் காலத்தில் யாழ்குடாவிற்கு வழங்கிய பெயர்.

(iii) பண்டைய இலங்கையின் அரசுரிமை வழங்கப்பட்ட இருமுறைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) a) 1ம் விஜயபாகு மன்னனின் பிள்ளை பருவக்காலம் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய மூலாதாரம் எது?

b) 2ம் விஜயபாகு மன்னனுக்கு ஆரம்பகால பகுதியில் பாதுகாப்பு வழங்கிய பிரதேச ஆட்சியாளர் யார்?

c) 1ம் விஜயபாகு மன்னன் பொலன்னறுவையை தனது ஆட்சி மைய நிலையமாக தேர்ந்து எடுத்தமைக்கு துணை செய்த இரு காரணிகளை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

**முதலாம் தவணைப் பரீட்சை - 2018**
**வரலாறு - தரம் 10**
**விடைகள்**
**பகுதி I**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 2 | 21. | 4 | 31. | 2 |
| 2. | 1 | 12. | 4 | 22. | 2 | 32. | 4 |
| 3. | 3 | 13. | 3 | 23. | 2 | 33. | 2 |
| 4. | 4 | 14. | 1 | 24. | 2 | 34. | 4 |
| 5. | 3 | 15. | 4 | 25. | 1 | 35. | 2 |
| 6. | 2 | 16. | 2 | 26. | 4 | 36. | 1 |
| 7. | 1 | 17. | 3 | 27. | 4 | 37. | 4 |
| 8. | 2 | 18. | 3 | 28. | 3 | 38. | 1 |
| 9. | 3 | 19. | 1 | 29. | 1 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 3 | 40. | 1 |

பகுதி II

(01) (அ) (i) இலங்கைப் படத்தில் குறிக்கப்படல் (12 புள்ளி)
(ii) உலக படத்தில் குறிக்கப்படல் (6 புள்ளி)
(ஆ) (i) A - பிலிப்ஸ் பல்டிஸ் B - நிஸ்ஸங்க மன்னன்
C - பளிங்கு கற்பாறைகள் D - வம்சத்தப்பகாசினி (4 புள்ளி)
(ii) A. 1. மட்பாண்டம் 2. உடரஞ்சாமடம்
3. முன்வரலாற்று காலம் 4. வனைதல் சில்லு (4 புள்ளி)
B. 1. ஏட்டுச் சுவடிகள் 2. பனை ஓலை
3. ஈகில்கள் 4. கறுப்பு நிறம் தீட்டல் (4 புள்ளி)

(02) (i) வம்சக்கதைகள், பௌத்த சமய நூல்கள், சத்தர்மலங்கார
(ii) புத்தபெருமானின் இலங்கை வருகை முதல் மகாசேனனின் ஆட்சி முடியும் வரை சில வரலாற்று செய்திகள் தீபவம்சத்தில் சுருக்கமாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. சில விடயங்கள் உள்ளடக்கபடாமல் விடப்பட்டுள்ளன.
(iii) நூல் எழுதப்பட்ட காலம், நூல் ஆசிரியர், நூல் ஆசிரியரின் நோக்கம், நூலுக்கான தகவல் திரட்டப்பட்ட விதம் விளக்குக.
(iv) பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

Educations கல்வி අධ්‍යාපන

(03) (i) A. மயுர, திசா, செலலிகின், சந்தேசிய
B. இபுனு பதூதாவின் தேச சஞ்சார அறிக்கை
C. கல்பொத்த கல்வெட்டு, ஹேயிடிகல கல்வெட்டு (3 புள்ளி)
(ii) கஹபன, புராண, தரண, சுவஸ்திகா
(iii) இதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் கல்வெட்டில் உறுதிப்படுத்தப்படுகின்றன. இலங்கை வரலாறு தொடர்ச்சியாக எழுதப்பட்டிருத்தல். தீப வம்சத்தின் குறைபாடுகள் நீக்கப்பட்டதாக இருத்தல். 2500 வருடங்களுக்கு பழமை வாய்ந்தது. (4 புள்ளி)
(iv) தாம் வாழும் சமூகம் மற்றும் உலகைப்பற்றி அறியலாம்.
இறந்தகால அனுபவங்கள் ஊடாக நிகழ்காலத்தை அறிந்து, எதிர்காலத்தை சிறப்பாக்கலாம்.
மற்றவர்களின் கலாசாரத்தை மதிக்கும் மனப்பாங்கை உருவாக்கலாம்.

(04) (i) சிஸ்திசாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு (3 புள்ளி)
(ii) A. பிராமிய கல்வெட்டு B. நிபைரோ C. உரோம் D. அரிஸ்டோடில் (4 புள்ளி)

(iii) வெளி நாட்டு, உள்நாட்டு வர்த்தகம்
பண்டைய பொருளாதாரம்
பண்டைய தொழில் நுட்பம்
காலம் வரையறுக்கப்பட்ட முறை (5 புள்ளி)
(iv) A.
B. சிங்கள எழுத்து வளர்ச்சி பற்றி இலங்கையின் மூலாதாரங்களை உறுதிசெய்தல். (6 புள்ளி)

(05) (i) மினிஹாகந்த, புத்தள, பதிராஜவெல, அலுசல (3 புள்ளி)
(ii) உணவு பெறும் வாய்ப்பு, நீர் கிடைக்கும் வாய்ப்பு, இயற்கை சக்தியில் இருந்து பாதுகாப்பு, கல்லாயுதங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை (4 புள்ளி)
(iii) வேட்டையாடி விலங்குகளை உணவாகப் பெற்றனர், தித்தயா வகையான மீன் சாப்பிட்டனர். தாவர உணவுகளை உண்டனர். (5 புள்ளி)



kalvi.lk

(iv) எலும்புகளை எடுத்து நிறம் பூசுதல், இறந்தவர்களை நல்லடக்கம் செய்து பின் அதன் எலும்புகளை வேறு இடத்தில் புதைத்தல், இறந்தவர்களின் மரணச்சடங்கை செய்தல்.

(6 புள்ளி)

(06) (i)

| வரலாற்றுக் காலம் | முன்வரலாற்றுக் காலம் |
|---|---|
| நாடோடி வாழ்க்கை<br>கல்லாயுதம்<br>மாமிச உணவு<br>கற்குகைகள் | நிலையான வாழ்க்கை<br>இரும்பிலான ஆயதம்<br>தாவர உணவு<br>வீடுகள் |

(3 புள்ளி)

(ii) A. உடரஞ்சா மடம் B. புதைகுழி மயானம்
C. கல்லறை மயானம் D. நிலையான குடியிருப்பு (4 புள்ளி)

(iii) ஆபரணம் பயன்படுத்தினர், உலோகக் குச்சி பயன்படுத்தல் (5 புள்ளி)

(iv) மட்பாண்ட உற்பத்தி, உலோகக் கைத்தொழில், கட்டிட நிர்மாணம், மயானங்கள் அமைத்தல்
(6 புள்ளி)

(07) (i) A. கும்பகாரகாம
B. கேவிட்டகாம
C. ஒலசம் (3 புள்ளி)

(ii) வருடாந்த மழைவீழ்ச்சி - மண்ணின் தன்மை
தரைத்தோற்ற வேறுபாடு - நீரோடை - இயற்கைவளம் (4 புள்ளி)

(iii) (a) கிரிந்தி ஓயா
(b) சேனைப் பயிர் பிரதானமானது, குளம் நிர்மானம் (5 புள்ளி)

(iv) கிராமத் தலைவர்களில் இருந்து ஒருவரைத் தெரிவுசெய்யும் முறைமையை (6 புள்ளி)

(8) (i) A - துட்டகைமுனு
B - தேவநம்பிய தீசன்
C - பண்டுகாபயன்

(ii)

(iii) வெளிநாட்டவரிடம் இருந்து நாட்டைக் காத்தல்.
பொருளாதார அபிவிருத்தியை செய்தல்
பௌத்த சாசனத்தை அபிவிருத்தி செய்தல்.

(iv) a) லம்பகர்ண
b) உள்ளக நிர்வாகத்தை விரிவாக்கல்.
அதிகாரத்தை பரவலடையச் செய்தல்.
வரி அறவிடல்.
குளங்கள் அமைத்தல்
நீரப்பாசனம் அமைத்தல்.

Education
கல்வி
අධ්‍යාපන

(9) (i) A. கொதுறுகோண
B. பன அதேக
C. ஹதி அதெக

(ii) A. பருமக
B. பஞ்ச பொருட்கள்
C. எல்லங்காவ
D. நகதீரம்

(iii) தந்தையிடம் இருந்து மகனுக்கு
மூத்த சகோதரனிடம் இருந்து இளைய சகோதரனுக்கு

(iv) a. i. பனாகடுவ வெப்பேடு
ii. சித்தரும புதல்னா
b. பொருத்தமான விடை



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**